ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2017/51 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

*2017/51 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

MP/2812

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மேம்படுத்தல் நடவடிக்கையின் கீழ் நிர்மாணிக்கப்படும் கெஸ்பேவ நிலக்கீழ் நீர்த்தேக்கத்திற்கான உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதன் பொருட்டு காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஏப்பிறல் 25,*
*5/2/2/1269.*

***அட்டவணை***

*கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 572 A, - கஸ்பேவ தெற்கு கிராம அலுவலர் பிரிவில், தெமலதுவ கிராமத்தில் அமைந்துள்ள மாரகஹவத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 19.2 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *வைத்தியர் டென்சில் பீரிஸுக்கு சொந்தமான காணி வெவ்வேறாக 3 அடி அகலமுள்ள கால்வாய் ;* |
| *கிழக்கு* | : | *கனன்நோருவ வத்த வெவ்வேறாக 3 அடி அகலமுள்ள கால்வாய் ;* |
| *தெற்கு* | : | *கனன்நோருவ வத்த காணியின் பகுதி;* |
| *மேற்கு* | : | *கெஸ்பேவ பண்டாரகம பிரதான வீதி.* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* *திரு. றுவன் பெரேரா,*
*இலக்கம் 69,*
*ஸ்ரீ தேவாநந்த வீதி,*
*தும்போவில,*
*பிலியந்தலை.*

*5- 617*

MP/2516

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு களுகங்கை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் II ஆவது கட்டத்தின் கீழ் கெசெல்வத்த நிலக்கீழ் நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழே அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஏப்பிறல் 25,
5/2/2/1266.

**அட்டவணை**

*களுத்துறை மாவட்டத்தில், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 670 – ஹொரேதுடுவ கிராம அலுவலர் பிரிவில், ஹொரேதுடுவ கிராமத்தில் அமைந்துள்ள பொகுனவத்த அல்லது கங்காராம விகாரஸ்தானவத்த என்றழைக்கப்படும் காணியில் முழு விஸ்தீரணத்தில் இருந்து 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. அபேகுணவர்தன அவர்களினால் 2016.06.22 ஆந் திகதியுடையதாக தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 2016/W உடைய நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப் பகுதி.*

*1. துண்டிலக்கம் : 01 – காணியின் பெயர் : பொகுனுவத்த அல்லது தெல்தெனவத்த அல்லது கங்காராம விஹாரஸ்தான வத்த; விஸ்தீரணம் : சுமார் 20 பேர்ச்சஸ்*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | மதிப்பீட்டு வரி இலக்கம் 18 உடைய மாதன்கஹவத்த காணி மற்றும் சந்திரசேகர ஒழுங்கை ; |
| கிழக்கு | : | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் காணி ; |
| தெற்கு | : | கங்காராம விகாரையில் இருந்து காலி வீதி வரையான வீதி ; |
| மேற்கு | : | வரி மதிப்பீட்டு இலக்கம் 620 உடைய பொகுனவத்த அல்லது தெல்தெனவத்த அல்லது காணி மற்றும் கங்காராம விகாரஸ்தான வத்த. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:*

1. பௌத்த விவகாரங்கள் ஆணையாளர் நாயகம்,
பௌத்த விவகாரங்கள் திணைக்களம்,
கொழும்பு 07.

2. கௌரவ விகாரையின் பிரதம பிக்கு,
கங்காராம விகாரை,
ஹொரேதுடுவ,
மொறட்டுவை.

*5- 618*

MP/2846

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு குண்டசாலை- ஹாரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் பிச்சமல்வத்த சேவை நீர்த்தேக்கத்தை மற்றும் நீர் இறைக்கும் சாலைக்கு குழாய் பதிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஏப்பிறல் 25,*
*5/2/1/1279.*

**அட்டவணை**

*கண்டி மாவட்டத்தில், கண்டி கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 278 – குருதெனிய மேற்கு கிராம அலுவலர் பிரிவில், கிரிமெடிய கிராமத்தில் அமைந்துள்ள சேட்டியவத்த என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 12.5 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *தென்னேகும்புர, ரிகில்லகஸ்கட வீதி ;* |
| *கிழக்கு* | : | *கல்வி அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சியளிப்பு மத்திய நிலையம் மற்றும் அதற்கு உட்செல்லும் வழி ;* |
| *தெற்கு* | : | *சுவீகரித்துக் கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள துண்டிலக்கம் 04 ;* |
| *மேற்கு* | : | *கல்வி அபிவிருத்தி ஆய்வு மற்றும் பயிற்சியளிப்பு மத்திய நிலையத்திற்குரிய காணி.* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. கண்டறிய முடியவில்லை.*

*5- 619*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*